[26th April 1960

மழை பெய்வதால் அவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு நடந்து சென்று பாடங் கள் போதிப்பது என்பது கடினமாக இருக்கிறது. ஆகவே அங்கு அதிகப் படியான வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆறு மாதம் மழை பெய்கிறது என்றால், அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் அவர்கள் வீட்டிலேயே உட்கார்ந்து இருக்கவேண்டுமா என்று தெரிய வில்லை.

Age of retirement of teachers

* 827-D Q.—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று 1959-ம் வருடம் மே மாதம் சேலத்தில் நடைபெற்ற 49-வது மாகாணக் கல்வி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், இத்தீர்மானத்தின் மீது அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) No action was considered necessary pending the receipt of the report of the Pay Commission.

SRI A. GOVINDASAMY: 55 வயதுக்கு மேல் வேலை செய்யக் கூடிய உடல்நலம் இருந்தால் அவர்களை வேலை செய்ய அனுமதிக்க அர சாங்கத்திற்குள்ள ஆட்சேபணை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: 20 வயது வந்த வாலிபர் கள் தயாராக காத்துக்கொண்டு இருப்பதால் 55 வயது வந்த கிழவர்கள் வாலிபர்களுக்கு இடம் கொடுத்தால் நல்லது என்ற கருத்து இருக்கிறது. பே கமிஷன் சிபார்சு பார்த்து இதுபற்றி ஆலோசனை செய்யப்படும்.

SRI K. VINAYAKAM: Sir, do the Government trust that the Pay Commission would have considered this aspect of the question ? Do not the Government come to the conclusion that experienced teachers are any day much better to teach young plastic brains in the early stages, and if so, will the Government reconsider their decision and take steps to continue them even after the retirement age ?

THE HON. SRI C. SUBRAMANIAM: சில சமயத்தில் அனுபவம் நல்லதும் கூடத்தான். சில சமயம் அனுபவம் வேறு வழியில் அமைந் திருந்தால் புதிதாக போடுவது நல்லது. ஆகவே, ஒரேமாதிரியாக அனு பவம் வேண்டும், வேண்டாம் என்று சொல்ல முடியாது. இதெல்லாம் அந்தந்த ஆளைப் பொறுத்திருக்கிறது. எந்தெந்தத் துறையில் இது அமுலுக்கு வரவேண்டும் என்பதையும் பொறுத்திருக்கிறது.

Grievances of Kundah Project workers

* 827-E Q.—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from the work charged and service Union and the National Project Workers' Union at Kundah regarding their grievances ;

(*b*) the nature of their grievances ; and

(*c*) the action taken thereon ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

26th April 1960]

(*b*) The demands raised by these Unions are identical. The following are the demands raised by those Unions on the Madras State Electricity Board:—

(1) Project seniority should be common for all the three circles of Kundah, Emerald and Syndynallah Schemes for the purpose of retrenchment.

(2) Special pay of 12½ per cent to be paid to Nominal Muster Roll workers also.

(3) The Electricity Board to take up the responsibility for the contract workers as the principal employer.

(4) Full implementation of the agreement entered into between the Electricity Board and the Tamilnad Electricity Workers' Federation.

(5) Compensation for involuntary unemployment.

(6) Retrenchment of 41 workers in Avalanche Division should be effected only on the basis of Project Seniority and not on the Division Seniority.

(*c*) The matter is under consideration of the Government and final orders on the demands raised by the union will issue shortly.

Sri M. P. SUBRAMANIAM : இவர்களது கோரிக்கைகளை கடந்த ஓராண்டு காலமாக மின்சார போர்டினிடமும், அரசாங்கத்தினிடமும் தெரியப்படுத்தியும் இதுவரையிலும் ஒருவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் இம்மாதம் 15-ம் தேதியிலிருந்து 5,000-க்கு மேற்பட்ட வொர்க்கேர்ஸ் வேலை நிறுத்தம் செய்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் பேரில் போலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத்தெரியுமா ? 150 பேர்கள் கைது செய்யப்பட்டு கோவை, நீலகிரி சென்ட்ரல் ஜெயிலில் வைக்கப்பட்டிருப்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அந்த விவரங்கள் சர்க்காருக்கு வந்திருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : : இந்தக் கோரிக்கைகள் மீது லேபர் கமிஷனர் முன்பு விவாதம் நடந்து அவர்கள் ரிப்போர்ட் லேபர் டிபார்ட்மெண்ட்க்கு வந்து லேபர் டிப்பார்ட்மெண்ட் எப்பொழுது அனுப்பினார்கள் ? முடிவு எடுக்கவேண்டியது எந்த இலாகா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதன் முறை என்னவென்று சொன்னால், தொழில் தகராறு ஏற்பட்டவுடன் அதை கன்ஸிலியேஷன் நடத்துவதற்கு லேபர் இலாகா முன் வருகிறது. லேபர் டிபார்ட்மெண்ட் கன்சீலியேஷன் நடத்தி கன்ஸீலியேஷன் ரிப்போர்ட் அனுப்புவதற்கு முன்னால் எலெக்ட்ரிஸிட்டி இலாகாவிற்கு அனுப்பி இந்த விதமான அபிப்பிராயம் இருக்கிறது. நீங்கள் அதை ஒத்துக்கொள்ளுகிறீர்களா என்று கேட்கிறோம். அவர்கள் ஒத்துக்கொண்டால் அதையே முடிவாக இருவருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமாக வெளியிடப்படும். ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால் அதற்கு மேற்கொண்டு சட்டப்படி என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பரிசீலனை செய்யப்படும்.

Sri A. GOVINDASAMY : மின்சார தொழிலாளர்கள் அடிபட்டதும், சிறை தண்டனை அடைந்து வருவதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருப்பதாகச் சொன்னார்கள். குந்தாத் திட்டத்தை

[26th April 1960

நிறைவேற்றித்தந்த தொழிலாளர்களை பழி வாங்காமல் உடனடியாக சம ரசத்திற்கு வரவேண்டிய ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் உடனடியாக முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் தொழிலாளர் இலாகா முன்பு கன்ஸிலியேஷன் நடந்து கொண்டிருந்தது. கன்ஸிலியேஷன் நடந்த பிறகு இதுபற்றி சர்க்கார் சில ஆலோசனைகளை மின்சார போர்டிற்கு அனுப்பியது. அதற்குள்ளாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். அதனால் சில விளைவுகள் ஏற்பட்டன. அதன் பொறுப்பு தொழிலாளர்களுடையதுதான் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI N. K. PALANISAMI : கன்வலீலியேஷன் நடத்தி சர்க்காருக்கு ரிபோர்ட் 1959-ல் அனுப்பினார்கள். அந்த ரிபோர்ட்டில் தொழிலாளர்கள் கோரிக்கை நியாயம் என்று இருக்கிறதா அல்லது அவர்கள் கோரிக்கைகளை அட்ஜுடிகேஷனுக்கு விடப்பட வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்கள் சொல்லும் விவரம் சரியல்ல. பெப்ரவரி மாதம்தான் இந்த இலாகாவிலிருந்து மின்சார இலாகாவிற்கு என்ன செய்யலாம் என்ற ஆலோசனை அனுப்பப்பட்டிருக்கிறது.

9-30 a.m. SRI M. P. SUBRAMANIAM : இந்தக் கோரிக்கையைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படியானால் அரசாங்கம் இதன் பேரில் எடுக்கக்கூடிய (டிஸிஷன்ஸ்) முடிவுகளை மின்சார போர்டுக்கு அரசாங்கம் சிபாரிசுதான் செய்யுமா அல்லது, அதை அமல் நடத்தவேண்டும் என்று வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மின்சார போர்ட் என்பது ஒரு ஆட்டானமஸ் கார்ப்பரேஷன், அதற்கு நாம் சிபாரிசு தான் செய்ய முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : தங்களுடைய உரிமைகளுக்காக அமைதியுடன் போராடக்கூடிய தொழிலாளர்களின் போராட்டத்தை உடைப்பதற்காக சர்க்கார் அங்கே முயற்சி செய்கிறது என்பது உண்மையா ? இங்கே என்னவெல்லாமோ போலீஸ் சட்டங்களை போட்டு விட்டு குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மட்டும் ஊர்வலங்களை நடத்துவதற்கும், கோஷங்களைப் போடுவதற்கும் அனுமதி கொடுத்துவிட்டு, தொழிலாளர்கள் பக்கத்திலிருந்து நடத்தப்படும் போராட்டத்திற்கு மட்டும் பலவித தொல்லைகளைக் கொடுத்துக்கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் உடனடியாக நேரில் சென்று இதைத் தீர்த்து வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது கனம் அங்கத்தினர் அவர்களுடையவும், கனம் அங்கத்தினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியினுடையவும் புகார். இதில் எது உண்மை என்பதை விசாரித்துதான் சொல்ல முடியும்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த தேசம் எப்படிவேண்டுமானாலும் கெட்டுப்போகட்டும், இந்த தேசத்தின் முன்னேற்றம் எப்படி கெட்டுவிட்டாலும் நமக்கு சம்பந்தமில்லை என்று சொல்லக்கூடிய அளவில், தேசத் துரோகமான செயல்கள் என்று சொல்லக்கூடிய அளவில், ஏக காலத்தில் 5,000 மக்களுக்கும் ராஜ்யத்தின் முன்னேற்றத்தை தடை செய்கின்ற அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், அந்த முறையில் அவர்களுக்கு இப்போது என்ன கஷ்டம் ஏற்பட்டு விட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது மற்றொரு கட்சி செய்கின்ற புகார்.

26th April 1960]

Sri M. P. SUBRAMANIAM : மின்சார போர்ட் ஆட்டானமஸ் போர்டு என்ற முறையில் இருந்தாலும், நம்முடைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் தான் இருந்து வருகிறது. ஆகவே மின்சார தொழிலாளர்கள் பெடரேஷன் மின்சார போர்டோடு செய்து கொண்ட ஒப்பந்தம் என் நிறைவேற்றப்படவில்லை. அவைகளின் பேரில் என் ஓராண்டு காலமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அதோடு இதைப்பற்றி அரசாங்கம் என் மின்சார போர்டுக்கு தாக்கீது அனுப்ப முடியவில்லை ?

The Hon. Sri R. VENKATARAMAN : நம்முடைய ராஜ்யம் இயங்குவது ஒரு "ரூல் ஆப் லா" முறையில் தான். சர்க்கார் முதலீடு கொடுத்திருந்தாலும் தனியார் நடத்துவதாக இருந்தால் அது தனியான ஒரு கார்ப்பரேஷனுகத்தான் இருக்கும். சர்க்கார் முதலீடு போட்டிருக்கிறோம் என்பதற்காக இம்மாதிரியான கார்ப்பரேஷன் மீது எந்த விதமான உத்தரவையும் போட்டுவிட முடியாது. இரண்டாவது, ஒப்பந்தத்தை நிர்வாகம் மீறியிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதுவே சந்தேகம் தான். யார் உண்மையில் மீறியிருக்கிறார்கள் என்பதை பரிசீலனை செய்து தான் முடிவு செய்யவேண்டும்.

Sri M. KALYANASUNDARAM : எலக்ட்ரிஸிட்டி போர்ட் சட்டப்படி தனியாக இயங்கக்கூடிய ஒரு நிறுவனம் போன்றதுதான் என்றும், நம்முடைய ஆட்சியும் சட்டப்படிதான் அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படியானால் தனியார்கள் இது போன்ற விஷயத்தில் எவ்வளவு காலம் கடத்தினால் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்குமோ, அதே முறையில் காலம் கடத்திக் கொண்டிருக்கின்ற இதன் மீதும் லேபர் டிபார்ட்மென்ட் குறுக்கிட்டு இதை அட்ஜூடிகேஷனுக்கு விடுவதற்கு அரசாங்கம் என் முயற்சி எடுக்கக்கூடாது ?

The Hon. Sri R. VENKATARAMAN : சர்க்கார் எந்த சமயத்தில் எந்தெந்த தொழில் தகராறுகளை எல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு விட வேண்டும் என்று நினைக்கிறதோ அப்போது அட்ஜூடிகேஷனுக்கு விடும். அதல்லாமல் திடீரென்று இவைகளை எல்லாம் அட்ஜூடிகேஷனுக்கு விடப்படும் என்று சொல்லுவதற்கில்லை. அடுத்தபடியாக இந்தத் தொழில் தகராறு சம்பந்தமாக பெப்ரவரி மாதத்தில் சர்க்கார் சிபாரிசுகள் செய்திருக்கிறார்கள். அதை தொழிலாளர்கள் தெரிந்திருந்தும் கூட என் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்பது தான் தெரியவில்லை.

Sri N. K. PALANISAMI : இப்போது இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதால், சர்க்கார் இதில் தலையிட்டு சமரசத்தை உண்டாக்குவதற்கு என் முயற்சி செய்யக்கூடாது ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்கு அங்கிருக்கின்ற தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட இலாகாவினரை அணுகினால் அதற்கான முயற்சிகள் செய்யப்படும்.

Mr. SPEAKER: Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO DEEPEN THE WELLS DRIED UP IN PARTS OF ERODE TALUK.

Mr. SPEAKER: The hon. Member, Sri N. K. Palanisami, will now call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance.

Sri N. K. PALANISAMI: Sir, I rise to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., the failure of the Government to take steps to deepen the wells which have dried up due to continuous drought in Uthukuli and a part of Perundurai and Chennimalai firkas of Erode taluk.